*16 ஜூன், 2015*

## *ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது*

இனிமையான குழந்தாய், உனக்கு புதிய உலகின் மாஸ்டர் ஆக போகின்றோம் என்று உணர்வு உங்களுக்குள்ளே இருக்கின்றது. நாம் இப்போது சொர்க்கத்தின் வாயில்களுக்கு சென்று கொண்டிருக்கின்றோம். தொடர்ந்து உங்கள் இதயத்தை கேளுங்கள்: எனக்குள் எவ்வளவு வித்தியாசம் உள்ளது? தந்தை என்னை அவருக்கு சொந்தமாக்கி கொண்டு என்னை முன்பு நான் இருந்ததிலிருந்து முற்றிலும் என்னை மாற்றிவிட்டார்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் புதிய உலகின் மாஸ்டர் ஆக போகின்றேன் என்று விழிப்புணர்வை நான் உறுதி செய்துக்கொள்கிறேன். நான் பாபாவிற்கு சொந்தமானவன் என்று மீண்டும் மீண்டும் நினைவு செய்கின்றேன். நான் இந்த எளிய ஆனால் சக்தி வாய்ந்த எண்ணத்தை நினைவுசெய்யும் போது ஏற்படும் மாற்றத்தை அனுபவம் செய்கின்றேன்.

## *சமார்த்தி அல்லது சக்தி*

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## *மனோ-விருத்தி அல்லது மனோபாவம்*

பாபா ஆத்மாவிற்கு : நீங்கள் வாழம் வரை படிப்பதோடு மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டும். இந்த படிப்பு உங்கள் புத்தியின் உள்ளே எதிரொலிக்கிறது. நீங்கள் எந்த அளவிற்கு படிகின்றீர்களோ, நீங்கள் அதன்படி மகிழ்ச்சியை அனுபவம் செய்கின்றீர்கள். அனைத்தும் இந்த படிப்பை பொறுத்தது. மனிதர்கள் படிப்பதன் மூலம் மிகவும் உயர்ந்தவர் ஆக முடியும். தங்கள் அதிர்ஷ்டத்தில் இதை கொண்டவர்களே தங்கள் இதயத்தில் படிப்பை வைத்திருப்பார்கள்.

நான் வாழ்நாள் முழுதும் மாணவனாக இருக்கும் மனோபாவத்தை ஏற்றுக்கொள்வதில் உறுதியாக இருக்கிறேன். இதை செய்வதற்கு, நான் ஒரு இளவரசன் மற்றும் இளவரசி ஆகுவதற்கு இராஜ யோகம் படிப்பதில் கவனம் செலுத்துகின்றேன். என்னுடைய இதயபூர்வமான மனோபாவத்தோடு, நான் பாபாவுடன் படித்து உயர்வாக ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

## *திருஷ்டி அல்லது தூய பார்வை*

பாபா ஆத்மாவிற்கு : நேரம் வரும் போது, நாம் சென்று, புதிய உலகில் நம்முடைய அரண்மனைகளை கட்டுவோம். தந்தை மீண்டும் நீங்கள் இத்தகைய பொன்னான

அரண்மனைகளை எவ்வாறு கட்டுவீர்கள் என காண்பிகின்றார். அங்கு அதிகமான தங்கம் உள்ளது. தந்தை உங்களுக்கு எல்லையற்ற செல்வத்தை கொடுக்கின்றார். சுவர்க்கம் தங்கமாகும், நரகம் கல் ஆகும்.

இன்று என்னுடைய திருஷ்டியில், நான் புதிய உலக தங்க அரண்மனைகளை கற்பனை செய்கின்றேன். நான் பழைய உலகில் இருந்தாலும் அதை பார்க்கவில்லை. நான் என் திருஷ்டியில் புதிய உலகின் எல்லையற்ற பொக்கிஷங்களை மட்டுமே வைத்திருக்கிறேன்.

ஒரு அலையை உருவாக்குதல்

நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒரு அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையை செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம் முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.